2006 செப்டம்பர் 2]

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை எதிர்காலத்திலே நம்முடைய அரசினுடைய நிதிநிலைக்கேற்ப அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 147, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வீ. ராமநாதன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

147—

கோயிலைப் புதுப்பித்தல்

*** 1670—திரு. கே.வீ. ராமநாதன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, பூனாட்சி ஊராட்சி, நத்தமேடு அம்மன் கோயிலைப் புதுப்பித்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், பூனாட்சி அருள்மிகு சொக்கநாச்சியம்மன் திருக்கோயில் கருவறை, முன்மண்டபம், மதிற்சுவர் ஆகியவை சீரமைக்க வேண்டிய நிலையில் உள்ளன. இதற்கு உத்தேசமாக ரூ. 5 இலட்சம் தேவைப்படுகிறது. ஆனால், இத்திருக்கோயிலின் ஆண்டு வருமானம் 1,265 ரூபாய் மட்டுமே இருக்கின்ற நிலையில், இந்தத் திருக்கோயிலின் பெயரில் ரூபாய் 6,000 மட்டுமே முதலீடாகவும் இருக்கிறது. ஆகவே, போதிய நிதி வசதி இல்லாததால், தற்போது திருப்பணி செய்திடுவதற்கு வாய்ப்பில்லை என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே.வீ. ராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பவானி தொகுதியில், பூனாட்சி ஊராட்சிக்குட்பட்ட நத்தம்மேடு அம்மன் கோயில், பழமையான கோயில். இக்கோயிலைப் புதுப்பித்துத்தர, கடந்த ஆட்சியில் பொதுமக்கள் கோரிக்கை வைத்தும் நிறைவேற்றப்படவில்லை. இந்தக் கோயிலுக்கு 11 ஏக்கர் நிலம் உள்ளது.

இந்த நிலத்தை அனுபவித்து வருகின்ற குத்தகைதாரர்கள், சரியாகக் குத்தகைத் தொகையை வழங்குவதில்லை. ஆகவே, இதை முறையாக, வருடா வருடம் ஏலம் விட்டு, அந்த விளைச்சல் நிலத்தில் வருகின்ற அந்த வருமானத்தைக் கோயிலுக்குச் சேர்க்கவும், அதேபோன்று, இந்தக் கோயிலுக்குத் தகுந்த நிதி ஒதுக்கி, பழமையான இந்தக் கோயிலைப் புதுப்பித்துத் தரவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்று தங்கள்வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேறு உண்டியல் வருமானங்கள் அந்தத் திருக்கோயிலில் இல்லை. மேலும், அந்தக் கோயிலுக்குச் சொந்தமாக மானாவாரி நிலமாகத்தான் 4.06 ஹெக்டேர் நிலம் இருக்கின்றது. அதனுடைய வருமானம்தான், ரூபாய் 1,265 என்று குறிப்பிட்டேன். இருந்தாலும், அந்தத் திருக்கோயில் சிதிலமடைந்திருக்கின்ற நிலைமையில், போதிய நிதி வசதி இல்லையென்றாலும்கூட, அதற்குத் திருப்பணியைச் செய்ய வேண்டும் என்ற அந்த மக்களை ஊக்குவிக்கின்றவகையிலே, துறையின் சார்பிலே, 25 சதவிகிதம் நிதி உதவி செய்திடுவதற்கு கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கின்றது. ஆகவே, எஞ்சிய தொகைகளை, நம்முடைய மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் அவர்களும் அந்த முயற்சியிலே ஈடுபட்டுத் திரட்டினார்கள் என்றால் ஏதுவாக இருக்கும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.வி. சேகர்.

திரு. எஸ்.வி. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவர்னருடைய பட்ஜெட் உரையின் மீதான விவாதத்திலேயே நான் மயிலாப்பூர் கோயிலில் பக்தர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க, திருமணம் நடத்திக்கொள்வதற்கு அங்கு மறுபடியும் அனுமதி வழங்கப்பட வேண்டும் என்று கேட்டிருந்தேன். அப்போது ஆடி மாதம்; இப்போது எல்லோரும் தயாராக இருக்கிறார்கள். தாமதிக்கும் ஒவ்வொரு நாளும், முதிர்கன்னிகையாக ஆகக்கூடிய வாய்ப்பு ஏற்படுகிறது. ஆகவே, தயவுசெய்து, மயிலாப்பூர் கோயிலில் இந்து பக்தர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க, திருமணம் நடத்துவதற்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஆவன செய்வீர்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2006 செப்டம்பர் 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்வி, கோயிலைப் புதுப்பித்தல்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலயம் தூய்மையாக இருக்க வேண்டும் என்பதற்காகவும், சுகாதாரத்தை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காகவும்தான், கடந்த காலங்களில் திருமணம் செய்கின்ற அந்த நிகழ்ச்சிகளை நிறுத்தி இருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் மட்டுமல்ல; மற்றும் பல்வேறு அமைப்புகளைச் சார்ந்தவர்களும் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எல்லாம் வேண்டுகோள் வைத்திருக்கின்றார்கள். அதுபற்றி ஆலோசித்து, தக்க முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. பலராமன்.

முற்பகல் 10–10

திரு. பி. பலராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களும், பிற்படுத்தப்பட்ட மக்களும் வசிக்கும் பகுதியில், சுமார் 10 ஆயிரம் திருக்கோயில்களைப் புதுப்பிக்க ஆலயங்களின் தூய்மையில் அக்கறை கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்களால் 25 கோடி ரூபாய் செலவில் திட்டம் உருவாக்கப்பட்டு, ஒப்புதலும் வழங்கப்பட்டது. அரசு ஆணை வழங்கப்பட்டிருந்த நேரத்தில் தேர்தல் அறிவிப்பு வந்ததால் அது நிலுவையில் உள்ளது. ஆகவே, அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த தி.மு.க. ஆட்சியிலும் ஆதி திராவிடர்கள் வாழ்கின்ற பகுதியிலே இருக்கக்கூடிய கோயில்களுக்கு ரூபாய் 25 ஆயிரம் கொடுத்து உதவுகின்ற திட்டம் இருந்தது. அது, அவர்களுடைய ஆட்சியிலும் அறிவிக்கப்பட்டு, அந்தத் தொகைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. இப்பொழுது, மானியக் கோரிக்கையில்கூட, இந்து சமய மற்றும் அறநிலையத் துறையின்சார்பிலே அதுபற்றிக் குறிப்பிட்டிருக்கின்றோம். இந்த ஆண்டிற்கும், அதுபோன்று 25 ஆயிரம் ரூபாய் உதவி செய்கின்ற திட்டத்தின்கீழ், 2 ஆயிரம் கோயில்களுக்கு வழங்கப்படுகின்றது. தொடர்ந்து அது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய கோயிலிலிருந்து நிதியை எடுத்து சிறிய கோயில்களுடைய வளர்ச்சிக்காக அரசு வழங்கி வருகிறது. அப்படி, அதிக வருமானம் வருகின்ற திருவண்ணாமலை கோயிலிலிருந்து, எங்கள் மாவட்டத்திலே சோமாஸ்பாடி, பூதமங்கலம் போன்ற கோயில்களில் நடைபெறுகின்ற பணிகளுக்கு நிதி வழங்க அரசு முன்னுரிமை தருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து அதிகமாக வருகின்ற நிதியை அந்த மாவட்டத்திற்கு முன்னுரிமை தருகின்ற அளவிற்குப் பார்த்துக்கொள்வதாக உறுதி கூறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 148, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு.ப. வேலுமணி, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

148—

நூலகம்

***1884—திரு. சு.ப. வேலுமணி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதியில் புதிதாக நூலகம் தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதியில் புதிதாக நூலகம் தொடங்க விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை. பெறப்பட்டதும், நிபந்தனைகளுக்கு உட்பட்டுப் பரிசீலிக்கப்படும்.